**PONDICHERRY UNIVERSITY**
**PUBLIC RELATIONS WING**

**NEWS PAPER CLIPPINGS**

DAILYMANI DATED 15.05.2025

# ஜிப்மர், மத்திய பல்கலை.யில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

**புதுச்சேரி, ஏப்.14:** புதுச்சேரியில் உள்ள ஜிப்மர், மத்திய பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் பிறந்த நாளையொட்டி பாதயாத்திரை உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஜிப்மர் வளாகத்தில் எஸ்.சி., எஸ்.டி. ஊழியர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அலங்கரிக்கப்பட்ட அம்பேத்கர் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. ஜிப்மர் இயக்குநர் வீரசிங் நேகி தலைமையில் ஊழியர்கள் ஏராளமானோர் அம்பேத்கர் படத்துக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

**புதுவை மத்திய பல்கலை:** புதுச்சேரி காலாப்பட்டு பகுதியில் உள்ள புதுவை மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. அம்பேத்கர் குறித்த புத்தகக் காட்சி மற்றும் பாதயாத்திரை நிகழ்ச்சியை துணைவேந்தர் பி. பிரகாஷ்பாபு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு இடஒதுக்கீட்டுப் பிரிவு இணைப்பு அதிகாரி பி.ஜி.அருள் வரவேற்றார். கல்வி இயக்குநர் க.தரணிக்கரசு, கலாசார உறவுகள் இயக்குநர் கிளமண்ட் சகாயராஜ், பதிவாளர் ரஜனீஸ் புத்தானி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE NEW INDIAN EXPRESS DATED 15.05.2025

windianexpress.com

EXPRESS READ

### Univ seeks govt support for community college campuses in Mahe, Yanam

Puducherry: Pondicherry University Vice-Chancellor P Prakash Babu and Director of Studies K Tharanikkarasu met CM N Rangasamy at the Legislative Assembly on Tuesday, seeking government support for two major educational initiatives aimed at strengthening skill-based higher education. The university has requested land for setting up a permanent campus for the Pondicherry University Community College in Mahe and support for setting up a new Community College campus in Yanam. Both proposals fall under the Ministry of Education. The move aligns with the National Education Policy (NEP) 2020, which emphasises equitable access to higher education and the development of job-oriented skills. CM Rangasamy assured the delegation of the government's support in furthering the university's mission.

**PONDICHERRY UNIVERSITY**
**PUBLIC RELATIONS WING**

**NEWS PAPER CLIPPINGS**

THE HINDU DATED 15.05.2025

# Rich tributes paid to Ambedkar on his birth anniversary



Lieutenant Governor K. Kailashnathan and CM N. Rangasamy, paying floral tributes to the statue of B.R. Ambedkar. S.S. KUMAR

**The Hindu Bureau**
PUDUCHERRY

Various government and private events marked the 135th birth anniversary celebrations of the architect of Indian Constitution and social reformer B. R. Ambedkar in Puducherry on Monday.

Led by Lieutenant Governor K. Kailashnathan, the Puducherry government celebrated the birth anniversary of the late leader by organising events near the Legislative Assembly and at the Ambedkar Manimandapam on the Beach Road.

Mr. Kailashnathan, Chief Minister N. Rangasamy, Speaker R. Selvam, Home Minister A. Namassivayam, Minister for Public Works K. Lakshminarayanan and legislators garlanded the statue of Dr. Ambedkar opposite the main gate of the Assembly. They also paid floral tributes at the Ambedkar Manimandapam.

Leaders of various political parties, including Opposition leader and DMK convenor R. Siva, former CM V. Narayanasamy, PCC chief and MP V. Vaithilingam, BJP president and MP S. Selvaganbathy and AIADMK secretary A. Anbalagan garlanded the statue of Dr. Ambedkar.

**L-G holds interaction**

After the programmes in the town, the Lt. Governor visited Abhishekapakkam for interacting with the members of the Dalit community. The residents demanded immediate distribution of house site pattas and installation of streetlights on Abhishekapakkam-TN Palayam Road. They also wanted construction of a marriage hall in their village. The Lt. Governor assured them to distribute house site pattas in a few months.

Several events were organised by government and private educational institutions to celebrate the birth anniversary of Ambedkar. Jipmer Director Vir Singh Negi and Pondicherry University V-C P. Prakash Babu led the celebrations in their institutions.

**PONDICHERRY UNIVERSITY**
**PUBLIC RELATIONS WING**

**NEWS PAPER CLIPPINGS**

DINAKARAN DATED 15.05.2025

# புதுவை முதல்வர் ரங்கசாமியுடன் பல்கலை. துணைவேந்தர் சந்திப்பு



புதுவை முதல்வர் ரங்கசாமியை சட்டசபை அலுவலகத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு சந்தித்தார். அருகில் சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமிநாராயணன், திருமுருகன்.

**புதுச்சேரி, மே 15:** புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, முதல்வர் ரங்கசாமியை நேற்று சட்டசபை அலுவலகத்தில் சந்தித்தார். அப்போது மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ், மாஹேவில் புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி நிரந்தர வளாகம் அமைப்பதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யவும், மேலும் மற்றொரு பிராந்தியமான ஏனத்தில் புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியை நிறுவுமாறு கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின்போது சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமிநாராயணன், திருமுருகன், பல்கலைக்கழக ஆய்வு இயக்குநர் பேராசிரியர் தரணிக்கரசு ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த முயற்சியானது, தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020ன் நோக்கங்களுடன் ஒத்துப்போகும் வகையில், அந்த பிராந்தியங்களில் திறன் அடிப்படையிலான உயர்கல்வி மற்றும் தொழில் பண்பாட்டு பயிற்சிகளை மேம்படுத்தும் வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.